TNTP1E0005582024

Presented on : 26-06-2024
Registered on : 28-06-2024
Decided on : 08-06-2026
Duration : 1 years, 11 months, 12 days

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம்

(சார்பு நீதிமன்றம்), முசிறி

முன்னிலை: திருமதி**. M.முருகானந்தி, B.Sc., B.L.**

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்

சார்பு நீதிபதி, முசிறி

2026 ம் ஆண்டு, ஜீன் 08 ம் நாள் திங்கள்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம் வைகாசி திங்கள் 25 ம் நாள்

MCOP.NO: 144/2024

(CNR No. TNTP1E-000558-2024)

1. பெரியக்காள், (வயது 64/2024)
க/பெ. லேட் தங்கராசு,
இருப்பிடம் நெ. 18, காந்தி நகர் காலனி,
காட்டுப்புத்துார், தொட்டியம்,
திருச்சி மாவட்டம் - 621 207.

2. மணிசித்ரா, க/பெ. பொன்னையன்,
வயது 47/2024,
இருப்பிடம் நெ.2/251 சி,
பாரதி நகர், பழங்காவேரி,
பெட்டவாய்த்தலை, திருச்சி மாவட்டம் 639 112.

3. பொன்னரசு, த/பெ. லேட் தங்கராசு,
வயது 28/2024,

இருப்பிடம் நெ. 18, காந்தி நகர் காலனி,
காட்டுப்புத்தூர், தொட்டியம்,
திருச்சி மாவட்டம் - 621 207. .... மனுதாரர்கள்

/எதிராக/

1. பாபு எலியாஸ், த/பெ. பசீர்,
நெ. 4/376, பச்சினம்பட்டி கிராமம்,
H தொட்டம்பட்டி போஸ்ட்,
அரூர் தாலுகா, தருமபுரி மாவட்டம் 636 705.

2. M/s. இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்,
அதன் சார்பாக மேலாளர்,
நெ.19/1, கிங்ஸ்டோன் பார்க்,
இரண்டாவது தளம், புதூர் ஹை ரோடு ராமலிங்கம் நகர்,
திருச்சி 620 017. ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 28.06.2024ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 29.04.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர் அழைப்பாணையை பெற்றுக் கொண்டு முன்னிலையாகவில்லை என்பதால், 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைத்தரப்பாக்கப்பட்டுள்ள நிலையிலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.பாலகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை இதுநாள்வரை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

உத்தரவு

மோட்டார் வாகன விபத்துச் சட்டம் பிரிவு 166 ன் கீழ் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூ.50,00,000/- மும் பின்னிட்டு வட்டியும் மற்றும் இதர பரிகாரங்கள் கிடைக்க உத்தரவிட கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :

இறந்தவரின் வயது, தொழில் மற்றும் வருமானம்	தங்கராசு, வயது 68/2019, வாட்சுமேன் வேலை பார்த்து மாதம் ரூ. 25,000/- பெற்று வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.
விபத்து சம்பவ இடம், நாள் மற்றும் நேரம்	கடந்த 26.03.2019ம் தேதி இரவு சுமார் 6.30 மணியளவில் புதுப்பட்டி to நாமக்கல் மெயின் ரோடு புதுப்பட்டி KKP மில் அருகில் விபத்து நடந்துள்ளது.
குற்ற வழக்கு விபரம்	மோகனூர் காவல் நிலையம், குற்ற எண். 113/2019, இதச பிரிவுகள் 279, 338 @ 279, 304 (A) ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.
காயத்தின் விபரம்	தலையில் பலத்த அடி மற்றும் உடலில் பல பாகங்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டது.
சிகிச்சை விபரங்கள்	விபத்துக்கு பின்னிட்டு நாமக்கல் CM மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, பின் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலே இறந்துவிட்டதாகவும் உள்ளது.
சம்பவ விபரங்கள்	கடந்த 26.03.2019ம் தேதி இரவு சுமார் 6.30 மணியளவில் புதுப்பட்டி to நாமக்கல் மெயின்ரோட்டில் KKP மில் அருகில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடதுபுறம் ஓரமாக மண் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்த போது மேற்படி ரோட்டில் அந்த

	திசைக்கு பின்னால் வந்த TN 28 AA 3600 (Ashok Leyland lorry) என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து தங்கராசு மீது மோதியதில் அவருக்கு தலையில் பலத்த அடி மற்றும் உடலில் பல பாகங்களில் பலத்த காயம் ஏற்பட்டது.
மனுதாரர்களின் உறவுமுறைகள்	இறந்தவருக்கு 1ம் மனுதாரர் மனைவி, 2,3 மனுதாரர்கள் மகள் மற்றும் மகன் ஆவார்கள்.
காப்பீடு விவரங்கள்	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் ஆவார். 1ம் எதிர்மனுதாரர் வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.
மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை	ரூ.50,00,000/-

3. 2 எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுவில் சொல்லியுள்ள விவரங்களில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகள் தவிர மற்ற விவரங்கள் மறுக்கப்படுவதாகவும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாகவும், காப்பீட்டுக் கொள்கையானது குறிப்பிட்ட காலத்திற்கு காப்பீடு செய்யப்பட்டிருந்ததாகவும், மோட்டார் வாகன சட்டம் பிரிவு 3(1) ன் படி ஓட்டுநர் உரிமம் இல்லாமல் எந்தவொரு நபரையும் பொது இடத்தில் வாகனத்தை ஓட்ட அனுமதிக்கக்கூடாது என்பதாகவும், மேலும் காப்பீட்டுக் கொள்கையின் கீழ் ஒரு காப்பீட்டாளர் செலுத்த வேண்டிய தொகை அதிகமாக இருந்தால் காப்பீட்டுக் கொள்கையின் கீழ் அந்த நபரிடம் இருந்து வசூலிக்க உரிமை பெறுவார் என்பதாகவும், 2004(1) TNMAC 104ல்

வெளியான நேஷனல் இன்சூரன்ஸ் கோ லிமிடெட் எதிர் ஸ்வரன் சிங் மற்றும் பிறர் வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் முதல் முறையாக செலுத்து & வசூல் உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும், மனுவில் உள்ள விபத்து குறித்த விவரம் பொய்யானதாகவும், இறந்தவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வயது, தொழில் பணிபுரிந்த நிறுவனம் மற்றும் வருமானம் ஆகியவை அனைத்தும் மறுக்கப்படுவதாகவும், எனவே மனுதாரர்களின் மனுவினை செலவுத் தொகைகளுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்</u>

(i) 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அதிவேகத்தால் விபத்து ஏற்பட்டதா?

(ii) மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்களா?

(iii) மனுவில் கோரியவாறு மனுதாரர்களுக்கு கிடைக்கும், இழப்பீடு தொகை எவ்வளவு?

5. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 முதல் எ.ம.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.ஆ 1 முதல் எ.ம.சா.ஆ 6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது.

7. <u>தீர்வு:</u>

பிரச்சினை-1 க்கான தீர்வு

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது. சாட்சிய, சாண்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் ம.சா.ஆ 1 முதல் தகவல் அறிக்கை மற்றும் மருத்துவ சிகிச்சை ஆவணங்களின் படி 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அதிவேகத்தின் காரணமாக விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் தங்கராசு இறந்தார் என்பது தொடர்பாக தெளிவாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதால், மனுவில் கோரியபடி உரிய இழப்பீட்டு தொகையை வழங்க உத்தரவிடுமாறு வாதிட்டு அதற்கு ஆதரவாக, **Andal Vs. Avinav Kannan, National Insurance company limited Vs. Pranay Sethi** மற்றும் **Magma General Insurance company limited Vs. Nanu Ram Alias Chuhru Ram** என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

8. மாறாக, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்து அதன்படி, விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாகவும், காப்பீட்டுக் கொள்கையானது குறிப்பிட்ட காலத்திற்கு காப்பீடு செய்யப்பட்டிருந்ததாகவும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாக வாதிட்டார்.

9. இந்த நிலையில், மனுவில் இறந்து போன தங்கராசு விபத்தில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறந்ததற்காக இழப்பீடு கோரி 1 முதல் 3 வரையிலான மனுதாரர்கள் வாரிசுகளாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதை மெய்ப்பிக்க 3ம் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆகவும், சுரேந்தர் என்பவரை ம.சா.2 ஆகவும் விசாரித்து கொண்டுள்ளார். அவர்களது சாட்சியத்தில் கடந்த 26.03.2019ம் தேதி இரவு சுமார் 6.30 மணியளவில் புதுப்பட்டி to நாமக்கல் மெயின்ரோட்டில் KKP மில் அருகில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி

இடதுபுறம் ஓரமாக மண் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்த போது மேற்படி ரோட்டில் அந்த திசைக்கு பின்னால் வந்த TN 28 AA 3600 (Ashok Leyland lorry) என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து தங்கராசு மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார்கள். மேற்படி சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு அமுத பாரதி புகார் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் மோகனூர் காவல் நிலைய குற்ற எண்.113/2019, இதச பிரிவுகள் 279, 338ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

10. மோட்டார் வாகன இழப்பீடு வழக்குகளில் வாகன ஓட்டுநர் சாலையின் வரும் நபர்களை கவனித்து வேகத்தை கட்டுப்படுத்தி போக்குவரத்து விதிகளை பின்பற்றி ஓட்டி இருக்கும் பட்சத்தில் மேற்படி விபத்து தவிர்க்கப்பட மிகுதியான வாய்ப்பு உள்ளது என்பதாக மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்புரையான **United India Insurance Company Vs. Krishnaveni and others (CDJ 2015 MHC 798)** என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் இந்த விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்ற நிலையில், மேற்படி விபத்து 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அதிவேகத்தால் ஏற்பட்டதாக 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. கவனக்குறைவை பொருத்து மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணத்தை முரண்படுத்தும் வகையில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை என்பதாக தெரியவருவதால், இந்த வழக்கு விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரச்சனை எண். 1 க்கு தீர்வு காண்கிறது.

11. <u>பிரச்சினை-2 க்கான தீர்வு</u>

1ம் எதிர்மனுதாரர் வாகனம், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு

செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதாக பிரச்சினை எண். 1க்கு இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ள நிலையில், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுத்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், எ.ம.சா.2 தன்னுடைய சாட்சியத்தில்,

“ 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் பார்த்திபன் என்பவருக்கு Sarathi portal ன் படி ஓட்டுநர் உரிமம் எண். TN 29T20050000716 – LMV 17.05.2005 (TN 29T) (NT 30.11.2035) வரையிலும், பொதுப்பணிவில்லை LMV 25.11.2005 (TN 29T) Trans 12.12.2006 (TN 29T) TR 30.11.2030 வரையிலும் தற்போது நடப்பில் உள்ளது. Sarathi portal ன் படி ஓட்டுநர் உரிமம் எண். TN 29T20050000716 – 26.03.2019 முதல் 25.09.2019 வரை தற்காலிக தகுதியிழப்பு செய்யப்பட்டுள்ளது ".

என்பதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அவரே தனது குறுக்கு விசாரணையில் -

" விபத்து நடந்த தேதியான 26.03.2019 ம் தேதியிலிருந்து விபத்து நடந்ததால் அவருடைய ஓட்டுநர் உரிமம் சஸ்பண்ட் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 26.03.2019ம் தேதி வரை ஓட்டுநர் உரிமம் நடைமுறையில் இருந்தது என்றால் ஆமாம்".

என்பதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ 3 சான்றாவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 26.03.2019 முதல் 25.09.2019ம் தேதி வரை சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. எனவே, விபத்து தேதியான 26.03.2019ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதாகவே நீதிமன்றம் கருதுகிறது. மேலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் விதமாக,

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணம் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில், மனுதாரர்களுக்கு பின்வரும் வகையில் இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் செலுத்தி வைக்க கடமைப்பட்டவர் ஆவார்.

12. **<u>பிரச்சினை-3 க்கான தீர்வு</u>**

இந்த விபத்தில் இறந்த தங்கராசுவின் பிரேத பரிசோதனை, இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவை சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாகத்தான் தங்கராசு இறந்தார் என்பதில் சந்தேகம் இல்லை என்பதும், அவர் இறக்கும்போது அவருக்கு வயது 68 என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ளது என்பதும், 1 முதல் 3 மனுதாரர்கள் இறந்த தங்கராசுவின் வாரிசுதாரர்கள் என்பதும் தெரியவருகிறது.

<u>(i) வருமானம்</u>

இறந்த நபர் விபத்திற்கு முன் KKP மில்லில் வாட்ச்மேனாக வேலை செய்து மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வந்தார் என்று மனுவிலும், ம.சா.1 சாட்சியத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதனை உறுதியூட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. எனவே ம.சா.1 ன் சாட்சியம் இறந்தவரின் வருமானத்தை நிரூபிக்கும் வகையில் தொடர்புடையதாக இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. ஆவணங்கள் இல்லை என்பதாலேயே ஒரு நபர் சம்பாதிக்கவில்லை என்றும் தீர்மானிக்க இயலாது. இறந்த நபர் சம்பாதிக்க இயலாத நிலையில் இருந்தார் என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மெய்ப்பிக்கவில்லை. எனவே மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரையான **Andal and others Vs. Avinav Kannan and another reported in**

2019 (1) TNMAC 54 (DB) என்ற முன் தீர்ப்பின் படி வருமான இழப்பீடு கணக்கீடுவது உகந்ததாக இருக்கும் என்ற இந்நீதிமன்றம் கருதுகிறது.

The National Income fixed by the Hon'ble Supreme Court of Inida for the vegetable vendor i.e Rs.6500 during the year 2007 -2008 X **Cost of Inflation Index for the year 2021 -2022**

Cost of Inflation Index for the year 2007 -2008

இந்த விபத்தானது 26.03.2019ல் நடைபெற்றுள்ளது. 2018-2019ம் ஆண்டிற்கான Cost Inflation Index 280 ஆகும். எனவே, 6500 x 280/129 =14,108/- ஆகும். எனவே இறந்தவரின் வருமானம் ரூ.14,100/- என கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

<u>(ii). எதிர்கால வருமான வாய்ப்பு</u>

இந்த நிலையில் இறந்த நபருக்கு விபத்து நடந்த தேதியில் வயது 68 என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ளது. மேற்கண்ட நிலையில், இறந்த நபருக்கு விபத்தின் போது 68 வயது என்பதாகவே நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் **நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் பிரனாய் சேத்தி (2017) 16 SCC 680** வழங்கிய வழிகாட்டு தீர்ப்பின் அடிப்படையில், விபத்து நடந்த நேரத்தில் இறந்தவருக்கு 68 வயது என்பதால், எதிர்கால வருமான வாய்ப்புகள் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது.

(iii). இறந்த தங்கராசு என்பவருக்கு 1ம் மனுதாரர் மனைவியாகவும், 2 மற்றும் 3 மனுதாரர்கள் மகள் மற்றும் மகனாகவும், மனுதாரரர்கள் தரப்பு சாட்சியத்தின் படி 1 முதல்

3 மனுதாரர்கள் இறந்து போன தங்கராசுவின் வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். எனவே, **Sarla Verma & Ors -Vs- Delhi Transport Corporation and another reported in AIR 2009 SC 3104** என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி 1/3.

(iv) எனவே விபத்தில் இறந்துவிட்ட இறந்த தங்கராசுவின் வருமானத்தில் வாழ்க்கை நடத்தியதாக உள்ளது. இந்த நிலையில், ஏற்கனவே முடிவு செய்த படி ரூ.14100/- மாத வருமானத்தில் இறந்த தங்கராசுவின் 1/3 பாகம் அவரது சொந்த தேவைக்காக கழித்தது போத மீத (14100-4700) = ரூ.9400/- மாத வருமானம் கணக்கிடப்படுகிறது. எனவே, மொத்த உத்தேச ஆண்டு வருமானம் (Notional income) ரூ.9400x12=1,12,800/- என முடிவு செய்யப்படுகிறது.

(v) மேலும் விபத்து நடந்த போது தங்கராசுவின் வயது 66-70 க்குள் இருந்ததால், பிரணேச் சேத்தி வழக்கின்படி, பயன்படுத்த வேண்டிய சரியான பெருக்கி 5 ஆக எடுத்துக் கொள்ளப்படுகிறது. எனவே மொத்த சார்பு இழப்பு (loss of dependency) = (1,12,800 x5) = 5,64,000/-.

(vi) அடுத்தபடியாக பிரணய் சேதி என்ற வழக்கில், தொகைகள் வழங்கப்பட வேண்டிய பிற தலைப்புகள் தொடர்பாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பின்வருமாறு சட்டத்தை வகுத்துள்ளது.

> **“Reasonable figures on conventional heads, namely, loss of estate, loss of consortium and funeral expenses should be Rs.15,000/- Rs.40,000/- and Rs.15,000/- respectively. The aforesaid amounts should be enhanced at the rate of 10 % in every three years”.**

(vii) மேற்கண்ட முன்தீர்ப்பு கடந்த 31.10.2017 ம் தேதி உத்தரவிடப்பட்டது. மேற்சொன்ன முன்தீர்ப்பின்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் ஒவ்வொரு மூன்று

வருடங்களுக்கு 10% வீதத்தில் அதிகரிக்கப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன தீர்ப்பின் படி இந்த வழக்கில் விபத்து கடந்த 26.03.2019ம் தேதி ஏற்பட்டுள்ளதால், 20% அதிகரிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு (Funeral Expenses) இறுதிச் சடங்குச் செலவுகளுக்கு ரூ.18,000/- மற்றும் (Loss of estate) சொத்து இழப்புக்கு ரூ.18,000/- பெற உரிமை பெறுவார்கள் (Loss of consortium) என்ற வகையில் ரூ.48,000/- ஆகவும், மேலும் மனுதாரர்கள் Loss of Consortium என்ற வகையில் உரிமை உள்ளதா என்பதை குறித்து பார்ப்பது இந்த நீதிமன்றத்தில் பொறுப்பாகும்.

(viii) எனவே, loss of consortium என்பதை பொறுத்தவரை, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி Vs. சோம்வதி தேதியிட்ட 07.09.2020 மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கோ லிமிடெட் Vs. சதீந்தர் கவுர் (எ) சத்விந்தர் கவுர் மற்றும் பிற** வழக்குகளில் 30.06.2020ம் தேதியிட்ட வழக்குகளில் spousal consortium என்பதை மட்டும் மேற்படி முன்தீர்ப்புகளில் குறிப்பிடப்படவில்லை. மேலும், filial consortium மற்றும் parental ஆகியவற்றையும் சேர்த்து மேற்கண்ட முன்தீர்ப்புகளில் தீர்ப்பளித்துள்ளது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட முன்தீர்ப்புகளின் அடிப்படையில் இந்த வழக்கில், முதல் மனுதாரர் மனைவியை இழந்துள்ளார். அதனால் 1ம் மனுதாரருக்கு spousal consortium என்ற வகையில் ரூ.48,000/-ம் பெற உரிமையுள்ளது என்றும், 2 மற்றும் 3 மனுதாரர்கள் தன் தந்தையின் கவனிப்பையும் வழிகாட்டுதலையும் இழந்துள்ளனர். எனவே 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு (loss of parental consortium) என்ற தலைப்பின் கீழ் ஒவ்வொருவரும் தலா ரூ.48,000/- பெறத்தக்கவர்கள் ஆவார்கள்.

(ix) எனவே, 1 முதல் 3 மனுதாரர்களுக்கு பின்வரும் நியாயமான இழப்பீட்டை வழங்குகிறது.

S. No.	Under the head	Calculation	Amount

1)	Monthly Income (Monthly income + Future prospectus)	Rs.14,100+0=14100	Rs.14,100/-
2)	Deduction of 1/3 for his personal expenses	Rs.14,100– 4,700(14100/3 =9,400	Rs.9,400/-
3)	Annual loss of income	Rs. 9,400x12	Rs.1,12,800/-
4)	Loss of income after applying multiplier 5	Rs.1,12,800x5=5,64,000/-	Rs.5,64,000/-
5)	**Compensation**		
i)	Loss of dependency		Rs.5,64,000/-
ii)	Funeral expenses		Rs.18,000/-
iii)	Loss of estate		Rs.18,000/-
iv)	Loss of consortium (48,000x3)		Rs.1,44,000/-
6)	Medical expenses		Nil
Total Award amount			Rs. 7,44,000/-

13. எனவே மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.7,44,000/- கிடைக்கத்தக்கது என்று விடை காணப்படுகிறது.

14. மேற்கண்ட மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ.7,44,000/-, அதில் 1ம் மனுதாரர் மனைவி என்பதால் ரூ.5,00,000/-ம், 2 மற்றும் 3 மனுதாரர்கள் மகள் மற்றும் மகன் என்பதால், தலா ரூ.1,22,000/- மற்றும் அதற்குரிய வட்டியும் கிடைக்கக்கூடியது என்றும் உத்தரவிடப்படுகிறது.

15. முடிவு

I) முடிவில், மனுதாரர்களின் மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

II) 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.7,44,000/- ஐ அதற்குரிய வட்டியுடன் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

III) மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு 26.06.2024ம் தேதியான மனு தாக்கல்

தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5% வட்டி சேர்த்து விகிதாச்சார செலவுத் தொகையுடன் 2ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும்,

IV) மேற்கண்ட மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ.7,44,000/-, அதில் 1ம் மனுதாரர் மனைவி என்பதால் ரூ.5,00,000/-ம், 2 மற்றும் 3 மனுதாரர்கள் மகள் மற்றும் மகன் என்பதால், தலா ரூ.1,22,000/- மற்றும் அதற்குரிய வட்டியும் கிடைக்கக்கூடியது என்றும் உத்தரவிடப்படுகிறது.

V) மேற்படி இழப்பீட்டு தொகையினை உத்தரவு நாளிலிருந்து 2 மாதங்களுக்குள் 2ம் எதிர்மனுதாரர் சார்பு நீதிமன்றம், பாரத ஸ்டேட் வங்கி, முசிறி கிளை, A/No.SCM211MCOPOF1442024, IFSC: SBIN0004266க்கு RTGS (or) NEFT மூலம் செலுத்தி வைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

VI) அவ்வாறு செலுத்திய பின்னர் 2ம் எதிர்மனுதாரர் வங்கி அறிவுறுத்துதலின் நகல் (Copy of Bank Advice) ஒன்றை கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும், அதன் மற்றொரு நகலை மனுதாரர்கள் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

VII) மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஊதியமாக ரூ. 32,380/-.

(VIII) மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற கட்டணமாக ரூ. 6772.50/- ஐ செலுத்த வேண்டும். மனுதாரர்கள் ஏற்கனவே ரூ.372.50/- செலுத்தியது போக மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ. 6400/- ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

(IX) தவறுகைக்காக மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்திற்குரிய வட்டி மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை.

i)	நீதிமன்ற முத்திரைக்கட்டணம்	ரூ.6772.50/-
ii)	ஏற்கனவே செலுத்திய தொகை	ரூ. 372.50/-
iii)	மீதம் செலுத்த வேண்டிய தொகை	ரூ.6400/-
iv)	வக்காலத்து	ரூ.10.00/-

v)	படி செலவு	ரூ.9.00/-
vi)	கட்டளை சேர்பிக்க மற்றும் தயாரிக்க	ரூ.100.00/-
vii)	வழக்கறிஞர் கட்டணம்	ரூ.32380/-
	மொத்த செலவு தொகை	ரூ.39271.50 /-

(குறிப்பு: மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் சோழமண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட் எதிர் அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272 என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின் படி இவ்வழக்கிற்குரிய தீர்ப்பாணை விவரங்கள் அனைத்தும் இந்த தீர்ப்புரையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.)

என்னால் இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 08 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MURUGANANTHI M Digitally signed by MURUGANANTHI M Date: 2026.06.20 12:27:39 +0530

சார்பு நீதிபதி
முசிறி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி :</u>

ம.சா.1	08.10.2025	பொன்னரசு
ம.சா.2	22.10.2025	சுரேந்தர்

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

ம.சா.ஆ.1	-	முதல் தகவல் அறிக்கை - கணினி பதிவிறக்க நகல்
ம.சா.ஆ.2	-	குற்ற அறிக்கை - கணினி பதிவிறக்க நகல்

ம.சா.ஆ 3	-	TN 28 AA 3600 (Ashok Leyland lorry)- என்ற வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் - நகல்
ம.சா.ஆ 4	-	TN 28 AA 3600 (Ashok Leyland lorry)- என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை - கணினி பதிவிறக்க நகல்
ம.சா.ஆ 5	-	இறப்பு சான்றிதழ் - கணினி பதிவிறக்க நகல்
ம.சா.ஆ 6	-	வாரிசு சான்றிதழ் - கணினி பதிவிறக்க நகல்
ம.சா.ஆ 7	-	பிரேத பரிசோதனை அறிக்கை - நகல்
ம.சா.ஆ 8	-	1ம் மனுதாரரின் ஆதார் அட்டை - நகல்
ம.சா.ஆ 9	-	1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் - நகல்
ம.சா.ஆ 10	-	2ம் மனுதாரரின் ஆதார் அட்டை - நகல்
ம.சா.ஆ 11	-	2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் - நகல்
ம.சா.ஆ 12	-	3ம் மனுதாரரின் ஆதார் அட்டை - நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது)
ம.சா.ஆ 13	-	3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் - நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது)
ம.சா.ஆ 14	-	1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் - நகல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :</u>

எ.ம.சா.1	18.02.2026	பார்த்திபன்

எ.ம.சா.2	04.03.2026	ராமமூர்த்தி
எ.ம.சா.3	08.04.2026	ராமர்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

எ.ம.சா.ஆ.1	-	1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் - நகல்
எ.ம.சா.ஆ.2	-	எ.ம.சா.2 க்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அதிகார கடிதம் - அசல்
எ.ம.சா.ஆ 3	-	1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் DL Extract - நகல்
எ.ம.சா.ஆ 4	-	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி - நகல்
எ.ம.சா.ஆ 5	-	1ம் எதிர்மனுதாரர் மற்றும் ஓட்டுநர், மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்
எ.ம.சா.ஆ 6	-	1ம் எதிர்மனுதாரர் மற்றும் ஓட்டுநர், மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக Tracking paper - அசல்

MURUGANANTHI M
Digitally signed by MURUGANANTHI M
Date: 2026.06.20 12:27:46 +0530

சார்பு நீதிபதி
முசிறி.